2003 நவம்பர் 3]

முற்பகல் 11-30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 12, திருமதி எஸ். கனிதா சம்பத், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.*

12—

புதிய வழித்தடம்

•6459—திருமதி எஸ். கனிதா சம்பத்:

மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தாம்பரத்திலிருந்து சிங்கப்பெருமாள்கோயில் வழியாக அனுமந்தபுரம், சிறுகுன்றம், மலாரிப்பேட்டை, வெங்கூர் வழியில் கொட்டமேடு வரை சென்றுவர புதிய பேருந்து வழித்தடம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது முதல் இயக்கப்படும்?

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன், போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தாம்பரத்திலிருந்து சிங்கப்பெருமாள்கோயில், அனுமந்தபுரம், சிறுகுன்றம், மலாரிப்பேட்டை, வெங்கூர், கொட்டமேடு வழித்தடத்தில் மலாரிப்பேட்டையைத் தவிர்த்து மற்ற அனைத்து ஊர்களும் போதிய பேருந்து வசதி பெற்றிருப்பதால் கோரிக்கை வழித்தடத்தில் புதிய பேருந்து வழித்தடம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திருமதி எஸ். கனிதா சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசைநோக்கி வணங்கி, தாம்பரத்திலிருந்து சிங்கப்பெருமாள் கோயில் வழியாக அனுமந்தபுரம், சிறுகுன்றம், மலாரிப்பேட்டை, வெங்கூர் வழியில் கொட்டமேடு இங்கேயெல்லாம் விவசாயம் அதிகம்; காய்கறிகள் பூச்செடிகள்

பயிரிடுகிறார்கள். அதோடுமட்டுமல்லாமல், பள்ளிக்குச் சென்று படிக்கும் மாணவ, மாணவிகள் சிங்கப்பெருமாள்கோயில், கூடுவாஞ்சேரி, செங்கற்பட்டு, தாம்பரம் சென்றுதான் படிக்க வேண்டும். ஆகையால், திருப்போரூர் தொகுதி மக்களின் நலனைக் கருதி, வரும் நிதியாண்டிலாவது, புதிய வழித்தடம் அமைத்துத்தர அரசு முன்வருமா எனப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரவர்கள் கேட்டிருக்கின்ற வழித்தடமான தாம்பரம், கொட்டமேடு வழி சிங்கப்பெருமாள்கோயில், அனுமந்தபுரம், சிறுகுன்றம், மலாரிப்பேட்டை, வெங்கூர் வழித்தடத்தின் மொத்த நீளம் 41 கிலோமீட்டர். இதில் தாம்பரத்திலிருந்து சிறுகுன்றம் வரையிலான 38 கிலோமீட்டர் வரை காஞ்சிபுரம் அரசு போக்குவரத்துக் கழகம் தடம் எண் 82-ன் மூலம் வேண்டிய அளவுக்கு, போதுமான அளவுக்குப் பேருந்து வசதி செய்யப்பட்டிருக்கிறது. அதோடுமட்டுமல்ல, மாண்புமிகு உறுப்பினர் கேட்கின்ற 38-வது கிலோமீட்டரில் உள்ள சிறுகுன்றத்திலிருந்து வெங்கூர் வரையிலான 2 கிலோமீட்டர் தூரத்திற்கு மட்டும்தான் பேருந்து வசதி இல்லை. இருந்தாலும்கூட, இடைப்பட்ட தூரத்திலே இருக்கின்ற அந்த கிராமம், பக்கத்து கிராமங்களிலே இருக்கின்ற 2 கிலோமீட்டர் தூரத்திற்குப் பக்கத்திலே போதிய அளவு பேருந்து வசதி பெற்றிருக்கின்ற கிராமங்கள் இருப்பதால் அந்த இடத்திலிருந்து பேருந்து வசதியைப் பெற்றுக்கொள்ள இயலும். மேலும் அந்த வழித்தடத்தில் அந்த 2 கிலோமீட்டர் தூரத்திற்கும் புதிய பேருந்து விடவேண்டும் என்று சொன்னால், அதிலே இடையிலே இருக்கின்ற ஒரு பாலம் மிகவும் பழுதடைந்த நிலையிலே இருக்கிறது. பேருந்து இயக்க முடியாத நிலையிலே அந்தப் பாலம் பழுதடைந்து இருப்பதால், அந்தப் பழுதை நீக்க வேண்டுமென்று பொதுப் பணித் துறைக்கு எழுதப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பாலத்தைச் சரி செய்ததற்குப் பின்பு மாண்புமிகு உறுப்பினரின் கோரிக்கையை அரசு ஆய்வு செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 13, திரு. கு. அண்ணாமலை, மாண்புமிகு போக்குவரத்து மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.